**Starting time 03.24P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 198/2014**

Deposition of **P.W. -1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt.Kalpana, , Gr. III Bench Clerk of this court, on 28-09-2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜசேகரன் | Father Name | : தர்மலிங்கம் |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**: எனது தரப்பில் எனது அப்பா எனக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 30.08.2010 அன்று எழுதிக் கொடுத்த மற்றொரு தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 2 ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் அசல் வழக்கு எண் 272/2011 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போதே வா.சா.ஆ.6 மற்றும் 8 பிழை திருத்த பத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண் 272/2011 நான் Not pressed செய்ததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் நான் இந்த வழக்கை நடத்துவதால் மேற்படி வழக்கை Not pressed செய்தேன். மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கிற்கான தீர்ப்பு நகலை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவிலலை என்றால் சரிதான். மேற்படி தாவா தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால் வா.சா.ஆ.6 மற்றும் 8 ஆவணங்களான பிழை திருத்த பத்திரங்கள் அடிப்படையில் இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கோர இயலாது என்று சொன்னால்

சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண்.272/2011 மற்றும் இந்த வழக்கு சொத்தும் ஒன்றுதான். இந்த வழக்கின் தாவா சொத்து விவரம் பிழை திருத்த பத்திரங்களில் உள்ள சொத்து விவரத்தை அனுசரித்து போடப்பட்டுள்ளதா என்றால் தான செட்டில்மெண்ட் ஆவணங்களில் உள்ள சொத்து விவரமும் பிழை திருத்த ஆவணத்திலுள்ள சொத்துவிவரமும் ஒன்றுதான். மேற்படி பிழை திருத்த ஆவணத்தில் தேதி மட்டும் தான் பிழை திருத்தம் செய்யப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.6 மற்றும் 8 ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டு 3 வருடங்கள் கழித்துதான் இந்த தாவாவை நான் தாக்கல் செய்தேன் என்றால் மேற்படி எனது பெயரில் ஏற்படுத்தப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ததால் நான் இந்த தாவாவை தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.5 மற்றும் 7 ஆவணங்களான தான செட்டில்மெண்ட் ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.272/2011 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தின் மீது விளம்புகை பரிகாரம் கோராததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் மற்றும் பிழை திருத்த ஆவணங்கள் எனது அப்பாவை ஏமாற்றி அவரிடமிருந்து நான் கையொப்பம் பெற்ற ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 4 ஆவணங்களும் நடைமுறைக்கு வரவில்லை என்றும் நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் என்னுடைய அப்பா எனக்கு சுவாதீனம் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் அசல் வழக்கு எண். 272/2011ல் எனது அப்பாவை தரப்பினராக சேர்க்காமல் நான் தாவா தாக்கல் செய்தேன் என்றால் அவர் எனக்கு எந்த தொந்தரவும் கொடுக்காததால் நான் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்புதான் எனது பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் மற்றும் பிழை திருத்த பத்திரங்கள் பற்றி எனது அப்பாவிற்கு

தெரியவந்தது என்றால் சரியல்ல. மேற்படி விவரம் தெரியவந்த பிறகுதான் எனது அப்பா எனது பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணங்களை வா.சா.ஆ.1 மற்றும் 2 மூலம் ரத்து செய்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்களை ரத்து செய்த பின்புதான் வா.சா.ஆ.3 ஆவணமான தான செட்டில்மெண்ட் ஆவணத்தை 2 ஆம் பிரதிவாதிக்கு எனது அப்பா எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம்தான் உண்மையான பத்திரம் என்றும் செல்லக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 ஐ அனுசரித்து 2 ஆம் பிரதிவாதிக்கு பணம் தேவைப்பட்டதால் 3 ஆம் பிரதிவாதியான தனது மனைவிக்கு கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணங்களான பட்டா மாறுதல் உத்தரவை என்னால் உண்மையை மறைத்து வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண்.272/2011 நிலுவையில் இருக்கும்போதே மேற்படி வா.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணங்கள் வாங்கப்பட்டது என்று சொன்னால் மேற்படி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்படி ஆவணங்களை நான் வாங்கிவிட்டேன். மேற்படி அசல் வழக்கு எண் 272/2011 தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் நான் அந்தந் வழக்கில் உள்ள ஆவணங்களை வைத்து இந்த வழக்கில் பரிகாரம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் அவணங்கள் செல்லாது என்பதால் பிரதிவாதியின் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மை தன்மையை மறைத்து இந்த தாவா தாக்கல் செய்துள்ளதால் இந்த தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணையை 1 ஆம் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்.

**Ending Time : 03.55P.M.**

**ஒப்பம்/- அ.நர்மதாராணி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**